## ‘டங்ஸ்டன்’ன் சுரங்க ஏல உரிமை ரத்து!

# வல்லாளப்பட்டியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

## கிராம மக்கள் உற்சாகம்!

மதுரை,ஜன.28-

**டங்ஸ்டன் சுரங்க ஏல உரிமை ரத்து குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வல்லாளப்பட்டியில் கிராம மக்கள் அளித்த வரவேற்பில் விளக்கம் அளித்தார்.**

**டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக நேற்று முன்தினம் (26.01.2025) மதுரை மாவட்டம், வள்ளாலப்பட்டி கிராம மக்கள் சார்பில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில், மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு, பூரிப்போடு, பெருமையோடு, புளகாங்கித உணர்வோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சி எதற்காக ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.



டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை இரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திட்டத்தை இரத்து செய்ய உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக மதுரை மாவட்டம், வல்லாளப்பட்டி கிராம மக்கள் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (26.1.2025) நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில், அக்கிராம மக்களின் சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

### தலைமைச் செயலகத்திற்கு வந்து நன்றி தெரிவித்த கிராம மக்கள்!

டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிராக, நடத்திய போராட்டத்திற்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வெற்றியை அடிப்படையாக வைத்து, அந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு, திராவிட மாடல் ஆட்சியை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு நன்றி சொல்ல, வாழ்த்துச் சொல்ல, பாராட்டைத் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய பெரியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நேற்றைக்கு 30 பேருக்கும் மேற்பட்டவர்கள் நம்முடைய அமைச்சர் மூர்த்தி அவர்களுடைய தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார்கள். சந்தித்தபோது சொன்னார்கள்.

“உங்களுக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறோம். நீங்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய காரணத்தினால்தான், அதன்மூலம் அழுத்தம் தந்த காரணத்தினால்தான், இந்த வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே, உங்களுக்கு நன்றி சொல்வதற்கு நீங்கள் உடனடியாக ஒரு தேதி தர வேண்டும். அந்தத் தேதியைப் பயன்படுத்தி நாங்கள் உங்களுக்குப் பாராட்டு விழா நடத்தப் போகிறோம்” என்று சொன்னார்கள்.

### மக்களின் அன்புக் கட்டளையை ஏற்று இங்கு வந்துள்ளேன்!

“எனக்கு எதற்குப் பாராட்டு விழா, அது என்னுடைய கடமையல்லவா! என்று நான் அவர்களிடம் சொன்னேன். இல்லை, இல்லை நீங்கள் வந்தே தீர வேண்டும்” என்று என்னை அவர்கள் கட்டாயப்படுத்தினார்கள். அன்புக் கட்டளையிட்டார்கள். அவர்களுடைய அன்புக் கட்டளையை நான் ஏற்றுக்கொண்டு இங்கு வந்திருக்கிறேன்.

### இது – போராடி வென்ற மக்களுக்கு நடைபெறும் பாராட்டு விழா!

இந்த விழாவைப் பொறுத்தவரையில், எனக்குப் பாராட்டு விழா என்று நான் கருதவில்லை; உங்களுக்கு நடந்திருக்கக் கூடிய பாராட்டு விழாவாகத்தான் நான் இதனைக் கருதிக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், நீங்கள் உறுதியாக நின்று குரல் கொடுத்தது மட்டுமல்ல, உங்கள் உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்தி யிருக்கிறீர்கள். போராட்டத்தை நடத்தியிருக்கிறீர்கள். ஆகவே, உங்களுக்குத்தான் முதலில் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் எனக்காக நடைபெறுகிற பாராட்டு விழாவாக இதனைக் கருதாமல், உங்களுக்காக நடைபெறக்கூடிய பாராட்டு விழாவாகத்தான் நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

நான் வேறு, நீங்கள் வேறு என்று நான் பிரிக்க விரும்ப வில்லை. இது நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி.

ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பொறுத்த வரைக்கும், டங்ஸ்டன் சுரங்கத்தைக் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டார்கள். ஆனால் இன்றைக்கு மக்கள் சக்தியோடு அதை நாம் தடுத்து நிறுத்தி இருக்கிறோம். அதற்கான மகிழ்ச்சி மிக்க வெற்றி விழாவாக இது அமைந்திருக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய இந்த நேரத்தில், உங்கள் மகிழ்ச்சியில் நானும் கலந்து கொள்வதற்காகத்தான் நான் உங்களை நோக்கி வந்திருக்கிறேன்.

### மலர்ந்த உங்கள் முகங்கள் காணும் போது நீண்ட நேரம் பேச ஆசை!

உங்கள் முகங்களை எல்லாம் பார்க்கின்றபோது, முகமலர்ச்சியை எல்லாம் பார்க்கின்றபோது, உங்கள் மகிழ்ச்சி, எழுச்சியைப் பார்க்கின்றபோது இங்கே நீண்ட நேரம் உங்களிடத்தில் பேச வேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை! ஆனால் நேரம் இல்லை. காரணம் இந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு விமானத்தைப் பிடித்து சென்னைக்குச் சென்று நாளைக்கு விழுப்புரம் மாவட்டத்திற்கு இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவேண்டிய அவசியத்திற்கு நான் ஆளாகி யிருக்கிறேன். சுருக்கமாக நான் உங்களிடத்தில் தெரிவிக்க விரும்புவது; இன்றைக்கு ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பா.ஜ.க. அரசைப் பொறுத்தவரைக்கும் என்னென்ன கொடுமைகளை, என்னென்ன அக்கிரமங்களை எல்லாம் மக்களுக்கு விரோதமான செயல்களை எல்லாம் எதேச்சாதிகாரமாக செய்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

இன்றைக்கும் இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களில் இருந்து தலைநகராக இருக்கக்கூடிய டெல்லி நகரத்தை நோக்கி விவசாயிகள் பெரிய பேரணியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம், தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் நீங்கள் பார்த்திருப்பீர்கள், படித்திருப்பீர்கள்!

### மூன்றே மாதங்களில் மக்களின் போராட்டத்துக்குக் கிட்டிய மாபெரும் வெற்றி!

ஏற்கனவே, இதே தலைநகர் டெல்லியில் குளிரிலும், வெயிலிலும் போராட்டம் நடத்தி, நூற்றுக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்கள் இறந்து போயிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அப்படி நடத்திய அந்தப் போராட்டம் எவ்வளவு நாட்கள் நடத்தப்பட்டது என்று கேட்டீர்கள் என்றால், 2 ஆண்டுகள் நடைபெற்றது. ஆனால், டங்ஸ்டன் சுரங்கம் ஏலம் விடப்பட்ட செய்தி வெளியான உடனே, நீங்களே போராட்டம் நடத்தினீர்கள். ஆனால், மூன்றே மாதத்தில் நீங்கள் வெற்றியைக் கண்டிருக்கிறீர்கள் அதுதான் முக்கியம். ஒன்றிய அரசு பணிந்து அதை ரத்து செய்திருக்கிறது. இதற்குக் காரணம்; மக்களாகிய நீங்களும், நம்முடைய தமிழ்நாடு அரசும் காண்பித்த மிகக் கடுமையான எதிர்ப்புதான் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்ற வெற்றி சாதாரண வெற்றி இல்லை, இது ஒரு மாபெரும் வெற்றி!

### நாடாளுமன்றத்தில் ஆதரித்துப் பேசிய அ.தி.மு.க. எம்.பி., தம்பிதுரை!

இந்த டங்ஸ்டன் சுரங்கத்துக்கு மூல காரணம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், “மாநில அரசு அனுமதி இல்லாமல், முக்கிய கனிம வளங்களை ஒன்றிய அரசே ஏலம் விடலாம்”

என்று நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம்தான் இதற்கு மூலகாரணம்! இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்காக நாடாளுமன்றத்தில் மசோதாவை நிறைவேற்றிய நேரத்தில், அன்றைக்கு அதை திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, தி.மு.க. கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து அதை கடுமையாக எதிர்த்தோம். ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. என்ன செய்தது? அதை எதிர்த்தார்களா? இல்லை. அதுவும் குறிப்பாக மாநிலங்களவையில் உறுப்பினராக இருக்கக்கூடிய தம்பிதுரை. இந்தச் சட்டத்தை ஆதரித்து, வரவேற்றுப் பேசியிருக்கிறார். அது எல்லாம் தொலைக்காட்சியில் வந்திருக்கிறது. நீங்கள் எல்லாம் சோசியல் மீடியாவில் பார்த்திருப்பீர்கள். அதுதான் டங்ஸ்டன் பிரச்சினையின் தொடக்கப்புள்ளியாக இருந்தது.

### திட்டமிட்டுப் பொய்ப் பிரச்சாரம் செய்வோர்!

அதைத் தொடர்ந்து, 2 முறை டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில், ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம். அதையும் அரசியல் காரணங்களுக்காக சிலர் இன்றைக்கு மறைக்கப் பார்க்கிறார்கள். தொடக்கத்திலேயே நாம் நம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இன்றைக்குத் திட்டமிட்டு பொய்ப் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் எழுதிய கடிதங்களையும் மீறி, ஒன்றிய பா.ஜ.க அரசு ஏலம் விடுவதற்கான முயற்சியைச் செய்தார்கள். அதனால்தான் நாம் தொடர்ந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

### அமைச்சர் மூர்த்தி வழங்கிய வாக்குறுதி!

குறிப்பாக,

23.11.2024 அன்று அரிட்டாப்பட்டியில் நடந்த கிராமசபைக் கூட்டம்; அந்தக் கூட்டத்தில், மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதற்கு எதிராக தீர்மானம் போட்டார்கள். அப்போது பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் மூர்த்தி அதில் கலந்து கொண்டார். “இந்தத் திட்டத்தை அமைக்க முயற்சி செய்தால், நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் அதற்கு அனுமதி தர மாட்டார்” என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

“தமிழ்நாடு அரசு அதை தடுத்து நிறுத்தும்” என்று உறுதி அளித்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அதற்குப் பிறகு, 29.11.2024 அன்று மேலூரில் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதைச் செய்தியில் பார்த்துவிட்டு “டங்ஸ்டன் சுரங்கத்தை தமிழ்நாடு அரசு நிச்சயம் அனுமதிக்காது. இதற்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும்” என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சொன்னவர் யார்? இங்கே இருக்கக்கூடிய அமைச்சர் மூர்த்தி! அங்கு வந்து தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இந்தச் செய்தி எல்லாம் அப்போதைக்கப் போது என்னிடத்தில் தொலைபேசியில் பேசிவிட்டு, அதைத் தொடர்ந்து இந்தக் கருத்துக்களை, உணர்வுகளை எல்லாம்; தமிழ்நாடு என்ன நிலையில் இருக்கிறது, முதலமைச்சர் எந்த உணர்வோடு இருக்கிறார் என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

### செய்தியறிந்து உடனேயே பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன்!

காலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. அன்றைய தினம் மதியமே பிரதமர் அவர்களுக்கு நானே அவசரக் கடிதம் எழுதினேன்.

இந்தத் திட்டத்தை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்து நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

அன்றைய தினம் மாலையில், நம்முடைய மதுரை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில், அனைத்து வணிகர் அமைப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. அதிலும், அரசின் சார்பில் அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு, அதனை விளக்கி இருக்கிறார்.

அதைத் தொடர்ந்து, சட்டமன்றத்தில், 9.12.2024 அன்று டங்ஸ்டனுக்கு எதிரான தீர்மானத்தை நானே கொண்டு வந்தேன். சிலர் இந்தப் பிரச்சினையில் குறுக்குச்சால் ஓட்ட முயற்சி செய்தார்கள். அது வேறு, நான் இந்த நேரத்தில் அந்தப் பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை, நான் அரசியலாக்க விரும்பவில்லை. இதை அரசியலாக நான் நினைக்கவில்லை. இது நம்முடைய பிரச்சினை. ஆகவே, அரசியல் பிரச்சினையாக நான் இதைக் கருதவில்லை. ஆனால், நான் மிகமிகத் தெளிவாகச் சொன்னேன்.

### பதவி பற்றிக் கவலையில்லை!

மக்களைப் பற்றியே எனது கவலை!

நான் ஒரு போர்ப்பிரகடனத்தை வெளியிட்டேன்.

“நான் இருக்கின்ற வரையில் நிச்சயம் டங்ஸ்டன் கனிமவளச் சுரங்கம் வருவதற்கான வாய்ப்பே இல்லை. நாம் அனுமதி தந்தால்தான் அவர்கள் உள்ளே கொண்டு வரமுடியும். அதையும் மீறி வந்தால், நிச்சயமாக நான் முதலமைச்சராக இருக்கமாட்டேன்” என்று அழுத்தந்திருத்தமாக சட்டமன்றத்தில் பதிவு செய்திருக்கிறேன். “அதற்குரிய வாய்ப்பே நிச்சயம் இல்லை! என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதில் திட்டவட்டமாக இருக்கிறோம். இதுதான் எங்கள் முடிவு”

– என்று தெளிவாக எடுத்துச் சொன்னேன். “அப்படி ஒரு சூழல் வந்தால், முதலமைச்சராக நான் இருக்க மாட்டேன்” என்று சொன்னபோது நம்முடைய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூட “அந்த வார்த்தையைச் சொல்லியிருக்க வேண்டிய அவசியம் இல்லை” என்று என்னிடம் சொன்னார்கள்.

எனக்கு அதுபற்றிக் கவலையில்லை, பதவி பற்றிக் கவலையில்லை. மக்களைப் பற்றிதான். மக்களுடைய பிரச்சினைதான் எனது கவலை என்று என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னேன்.

சட்டமன்றத் தீர்மானத்தையும், மக்களான உங்கள் உறுதியான போராட்டத்தையும் மதித்து, ஒன்றிய அரசு இப்போது இந்த ஏல அறிவிப்பை ரத்து செய்திருக்கிறார்கள்.

### சட்டப்பேரவைத் தீர்மானத்திற்கு – அனைவரும் ஒருமித்த ஆதரவு!

இந்த நேரத்தில், சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிட ஆதரித்து அனைத்துக் கட்சிகளும், பல்வேறு கட்சிகளும் தங்களின் உணர்வை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். எதிர்க்கட்சி, மாற்றுக்கட்சி, கூட்டணிக் கட்சி என்று பிரித்துப் பார்க்க நான் விரும்பவில்லை.

அனைத்துக் கட்சிகளுக்கும் உங்கள் சார்பாக, அதேபோல் இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியை, வணக்கத்தை நான் மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதே தெளிவாகச் சொன்னேன். “இது என்னுடைய அரசு இல்லை, இது உங்களுடைய அரசு” என்று சொல்லி இருக்கிறேன். என்றுமே உங்களில் ஒருவனாக இருந்து என்னுடைய கடமையை நிறைவேற்றுவேன் என்று சொல்லியிருக்கிறேன்.

### மக்களுக்கான ஆட்சி இது!

அதுமட்டுமல்ல, ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ என்று சொல்லித்தான் நான் முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

அந்த அடிப்படையில்தான் அவர்கள் வழியில் நின்றுதான் நான் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறேனே அல்லாமல், எங்களுக்காக இல்லை என்கிற உறுதியை மீண்டும் அளித்து, உங்களுக்காகத்தான் இந்த ஆட்சி என்பதை மீண்டும் எடுத்துச் சொல்லி, மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# ‘டங்ஸ்டன்’ ரத்து: இது அனைவருக்குமான வெற்றி!

**முதல்வர் உரை!**

முதல் பக்கத் தொடர்ச்சி

நான், நீங்கள் என்று பிரித்துப் பேச விரும்பவில்லை. நாம், நமக்கு – இதில் வெற்றி கிடைத்திருக்கிறது. அதுதான் உண்மை. ஆகவே, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கக்கூடிய நாங்கள் என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்போம் என்பதை மீண்டும் ஒருமுறை இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய அன்பான முகத்தைப் பார்க்கும்போது, உங்களுடைய எழுச்சியான முகத்தைப் பார்க்கும்போது, இங்கே சிரித்த முகத்தோடு, புன்முறுவலோடு உங்களைப் பார்க்கின்றபோது உங்களோடு நீண்ட நேரம் பேசவேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால், மற்றொரு நிகழ்ச்சியும் இந்த வட்டாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு நான் விமானத்தைப் பிடித்து சென்னைக்குச் செல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. நாளைக்கு வேறொரு மாவட்டத்திற்குச் செல்லவேண்டும். அதனால், நீண்ட நேரம் பேசமுடியாது. அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் ஒருமுறை உங்களையெல்லாம் சந்திக்க வருவோம். இன்னும் ஒன்றரை வருடத்தில் தேர்தல் வரவிருக்கிறது. அதுவும் உங்களுக்குத் தெரியும். அந்தத் தேர்தலில் நீங்கள் எல்லாம் என்ன முடிவோடு இருக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

### உங்கள் வீட்டுப் பிள்ளையின் ஆட்சி இது!

எது எப்படியிருந்தாலும், உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம். எங்களுக்காக நீங்கள் இருக்கிறீர்கள். ஆகவே, எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள். இது கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி. அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி. தந்தை பெரியார் அவர்கள் வழியில் நடைபெறக் கூடிய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி. உங்கள் வீட்டுப் பிள்ளை; உங்களில் ஒருவனாக இருக்கக்கூடிய இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய ஆட்சி இது என்பதை மாத்திரம் மனதில் வைத்துக் கொண்டு, என்றென்றைக்கும் நீங்கள் ஆதரவு தாருங்கள். உங்களுக்குப் பக்கபலமாக என்றைக்கும் நாங்கள் இருப்போம், இருப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, வல்லாளப்பட்டி கிராமத்திற்குச் சென்ற முதல்வர் அவர்களுக்கு அக்கிராம முக்கியப் பிரமுகர்கள் பொன்னாடை அணிவித்து, உற்சாக வரவேற்பு அளித்தனர்.

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான திட்டத்தை ரத்து செய்ய உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக கிராம மக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

அரிட்டாபட்டி மற்றும் வல்லாளப்பட்டி கிராம மக்களிடம் முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியபோது, மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு திட்டத்தையும் ஒன்றிய அரசு செயல்படுத்த நினைத்தால் அதனை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்தி, மக்களின் நலனைக் காக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி,

ஆ.வெங்கடேசன், எம்.பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ்.சங்கீதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.